2013 அக்டோபர் 28] [திரு. கே.டி. பச்சைமால்]

அடிப்படையில், பதிவு மேற்கொள்ளப்படுகிறது. மேற்கண்ட விவரங்கள் அனைத்தும் கிராம நிருவாக அலுவலரால் மட்டுமே பராமரிக்கப்படுகின்றன.

தொழிலாளர் துறையில் இயங்கி வரும் 17 அமைப்புசாராத் தொழிலாளர் நல வாரியங்கள் தவிர மேலும் 17 நல வாரியங்கள் பிற துறைகளின்கீழ் செயல்பட்டு வருகின்றன. அமைப்புசாரா நல வாரியங்களில் பதிவு செய்து கொண்டவர்களில் சிலர் ஏற்கெனவே விவசாயத் தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு பெற்றவர்களாக இருந்ததும் கண்டறியப்பட்டது. மேலும், ஒரே நபர் ஒன்றுக்கும் மேற்பட்ட அமைப்புசாராத் தொழிலாளர் நல வாரியங்களில் பதிவு செய்து கொண்டதும் அறியப்பட்டது. இதுபோன்ற தவறுகளைத் தவிர்க்கும் பொருட்டும் கிராம நிருவாக அலுவலர் மூலம் விண்ணப்பங்களில் அளிக்கப்பட்டுள்ள விவரங்களைச் சரிபார்ப்பது அவசியமாகிறது. இந்நடைமுறையினால் வாரியத்தில் போலியான பதிவுகள் ஏற்பட வாய்ப்பில்லை.

வங்கிக் கணக்கு துவங்குதல்

இவ்வரசு பொறுப்பேற்ற பின்னர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, நலத் திட்ட உதவிகளைப் பயனாளிகளுக்கு உரிய நேரத்தில் வெளிப்படையாக வழங்குவதை உறுதி செய்யும் வகையில், முன்னோடித் திட்டமாக, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், தூத்துக்குடி, கன்னியாகுமரி, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் ஆகிய 6 மாவட்டங்களில் நலத் திட்ட உதவிகளுக்கான பணப் பயன்களை மின்னணு பரிமாற்றம் முறையில் பதிவு பெற்ற தொழிலாளியின் வங்கிக் கணக்கில் நேரடியாகச் செலுத்த அரசாணை (நிலை) எண் 102, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (ஐ1) துறை, நாள் 8-11-2011-ன்படி ஆணையிடப்பட்டு செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம் தற்பொழுது அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

அமைப்புசாராத் தொழிலாளர்களால் வங்கிக் கணக்குகள் துவங்குவதில் ஆரம்ப காலத்தில் இருந்த இடர்ப்பாடுகளைத் தொழிற்சங்கங்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்ததைத் தொடர்ந்து, பல்வேறு வங்கிகளுடன் தொடர்பு கொண்டு குறைபாடுகளைக் களைய தொடர்ந்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கேட்பு மனு குறித்த விண்ணப்பங்களை பிற துறைகளில் சரிபார்த்தல்

ஒரு பயனாளி ஒரே நிகழ்வுக்காக அரசின் வெவ்வேறு நலத் திட்டங்களின்கீழ் பயன்களைப் பெறுவது தவிர்க்கப்பட வேண்டும் என்று நலத் திட்டங்களில் வரையறுக்கப்பட்டுள்ளது. மேலும், இக்கருத்து பல்வேறு அரசாணைகளின் வாயிலாகவும் வலியுறுத்தப்பட்டுள்ளது. மேலும், தணிக்கைத் துறையினரால் ஒரு பயனாளி ஒரே நிகழ்வுக்காக வெவ்வேறு நல வாரியங்களிலும் மற்றும் பிற துறைகளிலும் உதவித்தொகை பெற்றது கண்டறியப்பட்டு இக்குறைபாடுகளை நிவர்த்தி செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே, திருமணம், மகப்பேறு மற்றும் ஓய்வூதியம் தொடர்பான கேட்புமனுக்கள் முறையே தொடர்புடைய துறைகளான சமூக நலத் துறை, சுகாதாரத் துறை மற்றும் வருவாய்த் துறை ஆகிய துறைகளில் சரிபார்க்கப்பட்டு ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடி இனத்தைச் சேர்ந்த பயனாளிகளின் சாதி விவரம் கோருதல்

வரவு-செலவுத் திட்டத்தில், பொது நிதி ஒதுக்கீடு தவிர ஆதி திராவிடர் துணைத் திட்டத்தின்கீழும் (Special Component Plan for Scheduled Castes-SCSP), பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழும் (Tribal Area Sub-Plan-TSP) அமைப்புசாராத் தொழிலாளர் நல வாரியங்களுக்கு அரசு மானியமாக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை முழுமையாக அவ்வின மக்களுக்கே செலவிடப்பட வேண்டும். தமிழக அரசு இவ்விரு திட்டங்களின்கீழ் கடந்த மூன்று நிதியாண்டுகளில், ஒவ்வொரு நிதியாண்டிலும் ரூபாய் 28.875 கோடி உடலுழைப்பு மற்றும் 13 அமைப்புசாரா நல வாரியங்களில் பதிவு பெற்றுள்ள தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடி இனத்தைச் சேர்ந்த பயனாளிகளுக்கு உதவித்தொகை வழங்கும் பொருட்டு ஒதுக்கீடு செய்துள்ளது.

இதனடிப்படையில் மேற்படி இனத்தைச் சார்ந்த பயனாளிகளுக்கு முன்னுரிமை அளித்து பணப் பயன் வழங்கிட ஏதுவாக பயனாளிகளின் சாதி விவரங்கள் சேகரிப்பது அத்தியாவசியமாகிறது.

சட்டமன்றத்தில் எழுப்பப்பட்டுள்ள கவன ஈர்ப்பு அறிவிப்பு எண் 16-ல் குறிப்பிடப்பட்டுள்ள அவசரப் பொது முக்கியத்துவம்